# மெட்ரோ ரயில்: சைதையில் பாலப்பணிகள் வேகம்

சென்னை

மெட்ரோ ரயில் பாதைக்காக, அடையாறு ஆற்றில் தூண் அமைக்கும் பணி விறுவிறுப்பாக நடக்கிறது.

சென்னையில் நடைபெறும் மெட்ரோ ரயில் திட்டப் பணிகள், 2015ம் ஆண்டில் முடிவடையும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

இதையடுத்து, திட்டப் பணிகள் விறுவிறுப்பாக நடக்கின்றன. முதல் கட்டமாக வண்ணாரப்பேட்டை - விமான நிலையம், சென்ட்ரல் - பரங்கிமலை ஆகிய இரு வழித்தடங்களில் பணிகள் நடக்கின்றன.

இதில், வண்ணாரப்பேட்டையில் இருந்து சைதாப்பேட்டை வரை ரயில் பாதை பூமிக்கடியில் செல்கிறது. சின்னமலையில் இருந்து விமான நிலையம் வரை உயர்த்தப்பட்ட பாதையில் செல்கிறது. இதற்காக, சின்னமலையில் இருந்து விமான நிலையம் வரை தூண்கள் அமைத்து, பாலம் அமைக்கும் வேலை விறுவிறுப்பாக நடக்கின்றன.



சைதாப்பேட்டை அடையாறு ஆற்றில் சென்னை மெட்ரோ ரயில் பாதைக்காக பில்லர் அமைக்கும் பணி துரிதகதியில் நடக்கிறது.

சைதாப்பேட்டை, அடையாறு ஆற்றில் பிரமாண்ட பாலம் அமைக்கும் பணி தற்போது நடக்கிறது. இதற்காக, ஜே.சி.பி., இயந்திரங்கள் மூலம் ஏராளமான ஊழியர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

வண்ணாரப்பேட்டையில் இருந்து சைதாப்பேட்டை வரை சுரங்க ரயில் பாதை அமைக்க மண் பரிசோதனை நடக்கிறது. அதே போல், சென்ட்ரல் - பரங்கிமலை வழித்தடத்தில், சென்ட்ரலில் இருந்து திருமங்கலம் வரை சுரங்க ரயில் பாதை அமைக்கவும், மண் பரிசோதனை நடக்கிறது.

கோயம்பேட்டில் இருந்து பரங்கிமலை வரை உயர்த்தப்பட்ட ரயில் பாதைக்காக சாலையின் நடுவில் தூண்கள் அமைத்து, பாலம் கட்டும் பணியும் துரிதகதியில் நடக்கின்றன. அதை போல், கிண்டியில் இருந்து விமான நிலையம் வரையிலும் பால பணிகள் நடக்கின்றன.